සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Tamil

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	**தமிழ்மொழியும் இலக்கியமும்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ஆயிரக்கணக்கான பட்சிகள் ஆலமரத்தில் இன்ப கீதம் இசைத்தன. இங்கு பட்சிகள் என்பதன் ஒத்தபொருள்.
1. பறவைகள் 2. பூச்சிகள் 3. குயில்கள் 4. கிளிகள்

02. வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள். இங்கு அருமை என்பதன் எதிர்ப்பொருள்.
1. சிறுமை 2. பெருமை 3. வறுமை 4. எளிமை

03. உள்ளக்கமலமடி உத்தமனார் விரும்புவது. இங்கு 'உத்தமன்' என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1. உத்தமள் 2. உத்தமி
3. உத்துவிச்சி 4. உத்தமனாள்

04. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நாணய 'எக்ஸ்சேன்ஜ்' (exchange) இடம் பெறும். இங்கு 'எக்ஸ்சேன்ஜ்' என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்.
1. மாற்றம் 2. பண்டமாற்று
3. பரிமாற்றம் 4. கொடுக்கல் வாங்கல்

05. உவர், சாகரம், ஆழி ஆகிய பல சொற்களால் குறிக்கப்படுவது.
1. கிணறு 2. கடல் 3. குளம் 4. உப்பளம்

06. மட்பாண்ட வேலை செய்பவன் குயவன். என்பது போல கட்டட வேலை செய்பவன்.
1. தச்சன் 2. கொத்தன் 3. வலவன் 4. மடையன்

07. அடிவயிற்றில் இடி விழுந்தது போல என்ற உவமைத் தொடரின் பொருள்.
1. மீளா அழிவு 2. பெரிய ஆபத்து 3. கொடுந்துன்பம் 4. பாரிய நஷ்டம்

08. பின்வருவனவற்றுள் உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி என்ற கருத்தை புலப்படுத்தும் பழமொழி.
1. ஆனைக்கும் அடி சறுக்கும்
2. ஆழ அமுக்கினாலும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது
3. சாணேற முழம் சறுக்கும்
4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

09. அவளது பதைபதைப்பைக் கண்டு தயங்கி நின்றேன். இங்கு பதைபதைப்பு என்பது.
1. அடுக்குத்தொடர் 2. அடுக்கிடுக்குத்தொடர்
3. இணைமொழி 4. இரட்டைமொழி

Past Papers Wiki

10. எழுத்துப்பிழை இடம்பெற்றுள்ள சொற்றொகுதி,
    1. ஆத்திச்சூடி, நிருவனம்
    2. வயிற்றுளைவு, குடற்புழு
    3. உயிர்கொல்லி, நுளம்பு
    4. வனத்துறை, சுற்றுச்சூழல்

11. இதுபோல கோடிக்கணக்கான படைப்பின் இரகசியங்கள் இயற்கையில் உள்ளன. இவ் வாக்கியத்தின் எழுவாய்.
    1. இது
    2. படைப்பு
    3. இரகசியங்கள்
    4. இயற்கை

12. ரகு தூரிகையால் நிறம் தீட்டினான். இங்கு 'ஆல்' உருபு உணர்த்தும் பொருள்.
    1. கருவிப் பொருள்
    2. கருத்தா
    3. மூலப்பொருள்
    4. காரணப்பொருள்

13. பின்வருவனவற்றுள் இயல்புப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்.
    1. பாலாடை
    2. கரையோரம்
    3. புட்கள்
    4. வானவில்

14. அவன் இன்று வருவான்..... நாளை வருவான் இடைவெளிக்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்.
    1. ஆனாலும்
    2. என்றாலும்
    3. அல்லது
    4. எப்போதும்

15. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் கொண்ட சொல்.
    1. கடதாசி
    2. பனையோலை
    3. படைப்பாளி
    4. இளநீர்

16. பின்வருவனவற்றுள் தெரிநிலை வினைமுற்றினைக் கொண்ட சொல்.
    1. அழகானது
    2. நல்லவன்
    3. கூவியது
    4. ஓடுதல்

17. பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயர்.
    1. வந்தவன்
    2. வந்தான்
    3. வந்த
    4. வந்து

18. பின்வருவனவற்றுள் ஒத்தபொருளாலான இணைமொழி.
    1. இரவுபகல்
    2. ஓட்டமும் நடையும்
    3. ஏழை எளியவர்கள்
    4. சட்டதிட்டம்

19. பின்வருவனவற்றுள் செயப்படுபொருளைக் கொண்ட வாக்கியம்.
    1. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னின.
    2. கோபால் கதறிக்கதறி அழுதான்.
    3. நான் மரத்திலிருந்து விழுந்தேன்.
    4. யானைகள் மரங்களை முறித்தன.

20. பின்வருவனவற்றுள் உவமையணியைக் கொண்ட வாக்கியம்.
    1. காய்ச்சல் நெருப்பாய் காய்கிறது.
    2. அவள் முகம் நிலவு போல பிரகாசிக்கிறது
    3. அவள் வயிறு நிறைய சாப்பிட்டாள்.
    4. கார்மேகம் வானில் திரண்டது.

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம், இரண்டாம்** வினா உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் தலைப்புக்களுள் ஏதாவதொன்றைத் தெரிவு செய்து **150 சொற்களில்** அமையுமாறு கட்டுரை எழுதுக.

1. தமிழுக்கு தொண்டாற்றிய பெரியார்.
2. மரங்கள் இயற்கையின் வரம்.
3. நான் ஒரு ஆசிரியரானால்.
4. கிழிந்த ஆடையின் சுயசரிதை.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்பில் **50 சொற்களில்** அமையுமாறு கடிதம் எழுதுக.

அண்மையில் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்ற உமது நண்பனை பாராட்டியும் வாழ்த்தியும் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'வெண்ணிலாவே' என்ற கவிதை இடம்பெற்றுள்ள கவிதை நூலின் பெயர் யாது?
2. ஒழுக்கத்தின் எய்துவர் …….. இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் …….. குறட்பாவை பூர்த்தி செய்க.
3. குறிஞ்சிப் பூக்களின் வகைகளைப் பற்றி ஆய்வு செய்த நிறுவனம் எது?
4. ''எனக்கு நல்ல புல்லுத்தா'' இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
5. நாட்டுப்புற பாடல் பாடக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றினைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களின் கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியம் அமைக்குக.

1. கட்டுச்சோறு
2. தாவரவியலாளர்
3. பச்சைக்காய்கறிகள்
4. பண்டசாலை
5. பிரார்த்தனை

(10 புள்ளிகள்)

05. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகிய வாக்கிய உறுப்புகளைக் கொண்ட வாக்கியமொன்றை எழுதுக.
2. 'ஆனால்' எனும் இணைப்பிடைச் சொல்லை பயன்படுத்தி வாக்கியமொன்று அமைக்குக.
3. நாங்கள் நண்பர்களோடு சுற்றுலா சென்றோம் இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை, உருபு என்பவற்றைக் குறிப்பிடுக.
4. வினைச் சொல்லின் 2 பண்புகளை குறிப்பிடுக.
5. உறவு முறைக்கடிதத்தின் உறுப்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

Past Papers Wiki

06. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

1. பென்சில் செய்யப் பயன்படும் பைன்மரம் …….. தாவர இனத்தைச் சேர்ந்தது.
2. தமிழ்த்தாத்தா என அழைக்கப்பட்டவர் ……..
3. புதிய ஆத்திசூடியை பாடியவர் ……..
4. பெருஞ்சேரல் இரும்பொறையை நாடிச் சென்ற புலவர் …….
5. விபுலானந்தர் மட்டக்களப்பில் …….. எனும் இடத்தில் பிறந்தார்.

(10 புள்ளிகள்)

07. பின்வரும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மீனினம் ஓடி பறக்குதம்மா ! ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா !
வானும் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா !

முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ?
வெல்லுமதியின் திருமணமோ? அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ?

சின்னஞ் சிறு உலா வில்லாய்க் கண்டதம்மா - பின்னர்
செம்பொற்குடம் போலே தோன்றுதம்மா !
என்ன அதிசயம் பாரடியம்மா - ஈதோர்
இந்திர சாலமோ? கூறாயம்மா !

1. இப்பாடலின் பாடுபொருள் எது?
2. கடலாக மாறியது எது?
3. மதியின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் யாவை?
4. கவிஞர் எதனை அதிசயமாக வியந்து பார்க்கிறார்?
5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணி தொடரை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

අ.පො.ස [illegible] ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් [illegible] Past Papers Wiki [illegible]

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025

பாடம் தமிழ்மொழியும் இலக்கியமும்

விடைப்பத்திரம்

Tamil தரம் - 07

பகுதி – I

01. 1	06. 2	11. 3	16. 3
02. 4	07. 3	12. 1	17. 1
03. 2	08. 3	13. 1	18. 3
04. 3	09. 2	14. 3	19. 4
05. 2	10. 1	15. 3	20. 2

(2x20= 40 புள்ளிகள்)

பகுதி – II

01. கட்டுரைப் புள்ளித்திட்டம்

பொருள் பொருத்தம்	-	09
கட்டுரை நுட்பம்	-	06
மொழிச் செம்மை	-	04
சொல் எண்ணிக்கை	-	01
		20 புள்ளிகள்

02. கடிதம்

அமைப்பு	-	03 (முகவரி, விளிப்பு, முடிவு)
விடயம்	-	05
மொழிநடை	-	02
		10 புள்ளிகள்

03. 1. முற்றத்து மல்லிகை
2. மேன்மை, பழி
3. பாண்டிச்சேரி சலீம் அலி சுற்றுச்சூழல் நிறுவனம்
4. ஆடால் எலிக்கு
5. களைப்பை மறக்க / தொழில் செய்யும் போது (10 புள்ளிகள்)

04. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக. (10 புள்ளிகள்)

05. 1. கமலா புத்தகத்தை எடுத்தாள் (ஏதாவது பொருத்தமான விடை)
2. அவள் அழகானவள். ஆனால் திமிர் பிடித்தவள் (பொருத்தமானது)
3. 3ஆம் வேற்றுமை, ஓடு
4. காலத்தைக்காட்டும், செயலை உணர்த்தும், வேற்றுமை உருபை ஏற்காது.
5. முகவரி, விளிப்பு, விடயம், முடிவு, ஒப்பம் (ஏதாவது இரண்டு) (10 புள்ளிகள்)

06. 1. சைபீரியா சிதார்
2. உ.வே. சாமிநாத ஐயர்
3. பாரதியார்
4. மோசிகீரனார்
5. காரைதீவு (10 புள்ளிகள்)

07. 1. சந்திரன்
2. வானம்
3. முல்லை மலர்ப்பந்தல், முத்துவிதானம்
4. சின்னஞ்சிறு வில்லாய் தோன்றிய சந்திரன் பின் செம்பொற்குடம் போல தோன்றியமை.
5. செம்பொற்குடம் போல (10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank